MC 1/2019 Date: 06.08.2024

ம.சா.2 கோவிந்தசாமி த/பெ பச்சையப்பிள்ளை

குறுக்கு விசாரணை :

நான் டைல்ஸ் பதிக்கும் தொழில் செய்கிறேன். மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 2010ம் ஆண்டில் திருமணம் நடந்தது. அவர்கள் இருவரும் 8 வருடங்கள் ஒன்றாக குடும்பம் நடத்தினர். அவர்களுக்கு 2 பிள்ளைகள் உள்ளனர். எதிர்மனுதாரர் வேலைக்கு செல்லாமல் இருந்ததாக கூறி அவருக்கு மெமோ ஏதும் கொடுக்கப்பட்டதா அவர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டாரா என்ற விவரங்கள் எனக்கு தெரியாது. மனுதாரருக்கு திருமணத்தின் போது 20 சவரன் நகைப்போட்டோம். மனுதாரருக்கு எவ்வளவு நகை போடப்பட்டது என்ற விவரம் எதிர்மனுதாரருக்கு தெரியாது என்றும், அவருக்கு 2 சவரன் மட்டும் செய்யப்பட்டது என்றும் சொன்னால் நகை வாங்குவதற்கு எதிர்மனுதாரரும் வந்திருந்தார். மனுதாரருக்கு 17 பவுனும், எதிர்மனுதாரருக்கு 3 பவுனும், வாங்கி சீர் செய்தோம். மனுதாரர் அவரது நகைகளை எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து சென்றபோது தன்னுடன் எடுத்து சென்றுவிட்டார் என்றால் அவர் தாலிசெயின் 5 சவரன் மட்டுமே தன்னோடு எடுத்துவந்தார். பொருட்கள் ரூ.2,00,000/- மதிப்பிற்கு வாங்கிக்கொடுத்தோம். பொருள் வாங்க பணமாக கொடுக்கவில்லை. எதிர்மனுதாரருக்கு வாங்கிக்கொடுத்த இருசக்கர வாகனத்தை எனது பெரியம்மா மகன் கண்ணன் என்பவர் பெயரில் பதிவு செய்தோம். எதிர்மனுதாரர் மனுதாரரை குடிபோதையில் அடித்தது சம்மந்தமாகத்தான் பூந்தமல்லி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். அந்த புகாருக்கு காவல்நிலையத்தில் ரசீது கொடுத்தார்கள். அந்த ரசீது இந்த மனுவில் தாக்கல் செய்யப்பட்டதா எனக்கேட்டால் தாக்கல் செய்யப்பட்டது. காவல் நிலையப்புகாரின் பெயரில் நடைபெற்ற விசாரணையில் எதிர்மனுதாரருக்கு அறிவுரை சொல்லி அனுப்பினார்கள். மனுதாரரும், எதிர்மனுதாரரும் 8 வருடங்கள் சமூகமாகத்தான் குடும்பம் நடத்தினர் என்றும், ஜெல்லி என்ற செல்வம் என்பவர் தூண்டுதலில் பெயரில் மனுதாரர் எதிர்மனுதாரர் மீது காவல் நிலையப்புகார்களை கொடுப்பதை வழக்கமாக்கிக்கொண்டார் என்றும், அதனால் தான் அவர்களுக்கு இடையில் பிரச்சனை ஏற்பட்டது என்றும், சொன்னால் அது சரியல்ல. எதிர்மனுதாரர் தனது பிள்ளைகளை பார்க்க எனது வீட்டுக்கு வந்தபோது அவரை பார்க்க விடாமல் திருப்பிஅனுப்பிவிட்டேன் என்பது சரியல்ல. எதிர்மனுதாரர் மனுதாரர் மீது சேர்ந்து வாழக்கேட்டு சார்பு நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார் என்பது சரிதான். அந்த எதிர்மனுதாரரின் கோரிக்கை பற்றி நான் என்ன சொல்கிறேன் எனக்கேட்டால் அது பற்றி நான் எதுவும் சொல்லமுடியாது.